தினமணி

# தொடர் மின்வெட்டால் கருகும் வேர்க்கடலை பயிர்

ஜி.யோகானந்தம்

First Published : 07 Aug 2012 03:25:22 AM IST



திருத்தணி, ஆக. 6: தொடர் மின் வெட்டு, பருவமழை பொய்த்தது காரணமாக தாழவேடு கிராமத்தில் பயிரிடப்பட்டுள்ள வேர்க்கடலைப் பயிர் கருகி வருவதால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

3 மாதப் பயிரான வேர்க்கடலை சாதாரணமாக ஏக்கர் ஒன்றுக்கு 40 முதல் 50 மூட்டைகள் வரை மகசூல் கிடைக்கும். சரியான பராமரிப்பு இருந்தால் ஏக்கருக்கு 60 மூட்டைகள் வரை மகசூல் கிடைக்கும்.நெல் பயிரைவிட வேர்க்கடலைக்குப் பராமரிப்பு வேலைகள் குறைவு என்பதுடன், அதிக வருமானமும் கிடைப்பதால் விவசாயிகள் ஆர்வமுடன் பயிர் செய்து வருகின்றனர்.

திருத்தணி சுற்றுப்புற கிராமங்களான அகூர், கோரமங்களம், முருகம்பட்டு, டி.வி.புரம், வேலஞ்சேரி, காசிநாதபுரம், பொன்பாடி தாழவேடு உள்ளிட்ட கிராமங்களில் வேர்க்கடலை பயிர் செய்யப்பட்டு வருகிறது.இதில் கன்னிகாபுரம், செருக்கனூர், கே.ஜி.கண்டிகை, பெருங்களத்தூர், விநாயகபுரம் பகுதிகளில் அதிகளவில் பயிர் செய்யப்படுகிறது.

இந்நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள தொடர் மின்வெட்டுக் காரணமாக விவசாயப் பாசனத்துக்குத் தேவையான மும்முனை மின்சாரம் பகலில் மூன்று மணி நேரமும், இரவில் 2 அல்லது 3 மணி நேரம் மட்டுமே தரப்படுகிறது.

சுழற்சி முறையில் மின்சாரம் வழங்கப்படுவதால், எந்த நேரத்தில் மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது என தெரியாமல் விவசாயிகள் பகல், இரவு பாராமல் வயலில் காத்திருந்து போர்வெல் மோட்டார் மூலம் பாசனம் செய்து வருகின்றனர்.ஒரு ஏக்கருக்கு 3 முதல் 4 மணி நேரம்

வரை பாசனம் செய்ய வேண்டும்.ஆனால் திருவாலங்காடு ஒன்றியத்தில் உள்ள தாழவேடு, நெமிலி உள்ளிட்ட பல கிராமங்களில் வேர்க்கடலைப் பயிருக்கு போதுமான தண்ணீர் பாய்ச்ச முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.
இதனால் வேர்க்கடலை வயல்கள் ஈரப்பதமின்றி வறண்டு பயிர்கள் கருகி வருகின்றன. இது குறித்து அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து திருத்தணி, திருவாலங்காடு, பள்ளிப்பட்டு, பொதட்டூர்பேட்டை, ஆர்.கே.பேட்டை ஆகிய பகுதிகளில் போதுமான மும்முனை மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.
தாழவேடு கிராமத்தில் தொடர் மின்வெட்டால் கருகிவரும், வேர்க்கடலை பயிர்.

## காவிரி டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்தவையாக அறிவிக்கக் கோரிக்கை

First Published : 06 Aug 2012 12:02:59 PM IST

நாகப்பட்டினம், ஆக. 5: காவிரி டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவித்து, விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என நாகை மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
நாகை மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டம், நாகையில் சனிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: வரும் 12-ம் தேதி சென்னையில் நடைபெறும் டெசோ மாநாட்டில் நாகை மாவட்ட திமுகவினர் திரளாகப் பங்கேற்பது. நாகை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டைக் கண்டித்து, பல்வேறு போராட்டங்கள் நடைபெறும் நிலையிலும், பிரச்னைக்கு தீர்வு காண முன்வராத தமிழக அரசுக்குக் கண்டனம் தெரிவிப்பது.
காவிரி டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவிக்கவும், குறுவை சாகுபடி இழப்புக்குள்ளான விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் உடனடியாக நிவாரணம் வழங்கவும் கோருவது. தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணி நாள்களை 150 நாள்களாகவும், தினக் கூலியை ரூ. 150-ஆகவும் உயர்த்தி வழங்க மத்திய, மாநில அரசுகளைக் கேட்டுக் கொள்வது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்கு மாவட்ட திமுக அவைத் தலைவர் ச. குமரவேல் தலைமை வகித்தார். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் எஸ்.பி. தங்கையா, பி. கல்யாணம், முத்து ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட திமுக செயலர் ஏ.கே.எஸ்.
விஜயன் எம்.பி, கூட்டத்தின் நோக்கம் மற்றும் தீர்மானங்களை விளக்கிப் பேசினார். மாவட்ட முன்னாள் செயலர் அ. அம்பலவாணன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## இயற்கை பாதுகாப்பு விழா

First Published : 06 Aug 2012 11:07:22 AM IST

திருச்செந்தூர், ஆக. 5:÷திருச்செந்தூரில் இயற்கை பாதுகாப்பு விழாவை முன்னிட்டு அரிமா சங்கத்தினர் மரக்கன்றுகளை நட்டனர்.

÷திருச்செந்தூர் அரிமா சங்கம் மற்றும் அலையோசை பவுண்டேஷன் இணைந்து உலக இயற்கை வளம் பாதுகாப்பு நாளை திருச்செந்தூர் ஸ்டார்ஸ் மாடல் மெட்ரிகுலேஷன் பள்ளியில் கொண்டாடினர்.

÷நிகழ்ச்சிக்கு திருச்செந்தூர் அரிமா சங்கத் தலைவர் தை.அ.அமல்ராஜ் தலைமை வகித்தார்.

÷அலையோசை பவுண்டேஷன் மு.கணேஷ்குமார், வை.கனகசபாபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பள்ளித்தாளாளர் எம்.ஜெயதாஸ் மரக்கன்றுகளை நட்டார். பள்ளி முதல்வர் எம்.திவ்யநாதன், அரிமா சங்கச் செயலர் ஆனந்த், நிர்வாகிகள் ஆ.வரதன், தியாகு, ராஜரத்தினம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## காரைக்காலில் கனவா மீன்கள் விலை வீழ்ச்சி

First Published : 06 Aug 2012 12:30:44 PM IST

காரைக்கால், ஆக. 5: காரைக்காலில் மீன்கள் விலை வழக்கத்தைக்காட்டிலும் 50 சதவீதம் குறைந்துவிட்டதால், விசைப்படகு மீனவர்கள் கவலையடைந்துள்ளனர்.

காரைக்கால் பகுதி மீனவர்கள் விசைப் படகு மூலம் ஆழ்கடலுக்கு சென்று மீன்பிடித்து 3 நாள்களுக்குப் பிறகு துறைமுகம் திரும்புகின்றனர்.

பெரும்பாலும், காரைக்கால் கடல் பகுதி அல்லாத இடங்கள், குறிப்பாக கோடியக்கரை உள்ளிட்ட சுற்றுவட்டாரத்திலிருந்து மீன்களை பிடித்து வந்து காரைக்காலில் இருந்து ஏற்றுமதி செய்கின்றனர்.

பெரிய மீன்களைத் தவிர, சிறிய ரக மீன்கள், கனவா மீன்கள் போன்றவை ஏற்றுமதியால் லாபம் அடைந்து வந்ததாகவும், கடந்த 10 நாள்களாக ஏற்றுமதிக்குரிய மீன்களின் விலை வெகுவாக வீழ்ச்சியடைந்து விட்டதாகவும் காரைக்கால் மீனவர்கள் கூறுகின்றனர்.

கனவா மீன்கள் கிலோ ரூ. 270-க்கு விற்பனையானது.

தற்போது ரூ. 170-க்கு விலை போகிறதாம்.

ஆக்டோபாஸ் என்கிற கனவா மீன்கள் ரூ. 140-க்கு விலைபோனது.

தற்போது ரூ. 80-க்கு விற்பனையாகிறதாம். சங்கரா என்கிற சிகப்பு நிற மீன் ஒரு பெட்டி ரூ. 4,500 வரை விலைபோனது.

தற்போது ரூ. 1500-க்கு எடுத்துக்கொள்ளப்படுகிறதாம்.

இதனால், கனவா மீன்கள், சங்கரா மீன்கள் போன்ற சிறிய வகை, அதிகமாக கிடைக்கக்கூடிய மீன்களை பிடித்து வந்த விசைப்படகு மீனவர்களுக்கு லாபமே இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர்.

இதனால் கூடுதல் நாள் கடலுக்குள் தங்கியிருக்காமல் ஓரிரு நாளில் மீன்பிடித்துவிட்டு திரும்பி வருவதை கடந்த 10 நாள்களாக செய்து வருவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து காங்கிரஸ் கட்சியின் காரைக்கால் மாவட்ட மீனவரணித் தலைவர் ஏ.எம்.கே. அரசன் ஞாயிற்றுக்கிழமை கூறியது:

காரைக்கால் பகுதிக்கு வந்து மீன்களை ஏற்றிச் செல்லும் முகவர்களால் ஓரளவு மீனவர்கள் பயனடைந்து வந்தனர்.

கடந்த 10 நாள்களாக கனவா, சங்கரா போன்ற மீன்களின் விலை வெகுவாக வீழ்ச்சியடைந்து விட்டது.

ஆடி மாதம் ஒரு காரணமாக சொல்லப்படுகிறது.

தமிழகத்தில் 45 நாள் மீன்பிடி தடைகாலம் முடிந்த பிறகு கேரளத்தில் தடை காலம் வரும்.

தற்போது அங்கும் மீன்பிடிப்புப் பணி தொடங்கிவிட்ட நிலையில், கேரளத்துக்கு ஏற்றுமதி செய்யப்படும் மீன்களின் அளவு குறைந்துவிட்டது.

முகவர்கள் வெகு குறைவான விலைக்கே மீன்களை எடுக்கின்றனர்.

இதனால், மீனவர்களுக்கு படகு செலவு, தொழிலாளர்கள் கூலி உள்ளிட்டவைகளை ஒப்பிடும்போது லாபம் கிடைக்கவில்லை என்றார்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**நிலக்கடலை உற்பத்தி 11 லட்சம் டன் குறையும்**



புதுடில்லி: நடப்பு கரீப் பருவத்தில் (ஜூலை - அக்.,), நிலக்கடலை உற்பத்தி, முந்தைய பருவத்தை விட, 11 லட்சம் டன் குறையும் என, இந்திய எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டமைப்பு மதிப்பிட்டுள்ளது.இந்தியாவில், குஜராத், ஆந்திரா, கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில், மிகவும் அதிகளவில் நிலக்கடலை உற்பத்தி செய்யப்படுகிறது. பருவம் தவறிய மற்றும் குறைவான மழை பொழிவால், நடப்பு பருவத்தில், இதன் உற்பத்தி குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.கரீப் பருவத்தின், மொத்த நிலக்கடலை உற்பத்தியில், மூன்றில் ஒரு பங்கு, குஜராத்தின் சவுராஷ்டிரா பகுதியின் பங்களிப்பாக உள்ளது. நடப்பு கரீப் பருவத்தில், இப்பகுதி விவசாயிகள் நிலக்கடலையை தாமதமாக பயிரிட்டனர். மழை குறைவால், ஒட்டுமொத்த அளவில், நிலக்கடலை உற்பத்தி சரிவடையும் என தெரிகிறது.நடப்பு கரீப் பருவத்தில், மேற்கண்ட மாநிலங்களில், 36.53 லட்சம் ஹெக்டேரில், நிலக்கடலை பயிரிடப்பட்டுள்ளது. இது, முந்தைய பருவத்தை விட, (42.98 லட்சம் ஹெக்டேர்) 15 சதவீதம் குறைவாகும்.இதனால், ஒட்டுமொத்த நிலக்கடலை உற்பத்தி, 22 சதவீதம் குறைந்து, 51 லட்சம் டன்னிலிருந்து, 40 லட்சம் டன்னாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**உரம் விலை குறைக்க வேண்டும்விவசாயிகள் சங்கம் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட்07,2012,05:12 IST

கருத்தை பதிவு செய்ய

நாமக்கல்: "உர விலையை குறைக்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, தமிழக விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில், பல்வேறு கோரிக்கை வலியுறுத்தி, நாமக்கல்-மோகனூர் சாலை பி.எஸ்.என்.எல்., அலுவலகம் முன் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. மாநில பொதுச் செயலாளர் சுந்தரம் தலைமை வகித்தார். இளைஞரணி

அமைப்பாளர் வேலுசாமி வரவேற்றார்.
ஆர்ப்பாட்டத்தில், உற்பத்தி செலவின் அடிப்படையில், விவசாய விளை பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும். ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து, நிலத்தடி நீர் எடுத்தால், கட்டணம் விதிக்க வழி செய்யும், மத்திய அரசின் தண்ணீர் சட்டத்தை திரும்பப் பெறவேண்டும். காவிரி-பொன்னியாறு-திருமணிமுத்தாறு திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தை, விவசாயத்துக்கு பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்க வேண்டும். ரத்து செய்யப்பட்ட உரமானியத்தை திரும்ப வழங்கி, 300 சதவீதம் உயர்ந்துள்ள உரவிலையைக் குறைக்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தை, தனிநபர் பயிர் பாதிக்கப்படும் போது, காப்பீடு கிடைக்கும் வகையில், திருத்தி அமைக்க வேண்டும். கொச்சிக்கும், பெங்களூருவுக்கும் இடையே, தமிழகம் வழியாக எரிவாயு குழாய்கள் அமைக்க, விவசாய விளை நிலங்களை கையகப்படுத்தும் நடவடிக்கையை கைவிட வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டது.
சேலம் மாவட்டத் தலைவர் பழனிமுருகன், செயலாளர் பெரியண்ணன், பொருளாளர் நஞ்சப்பன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## ரூ.6 லட்சத்தில் சூரிய உலர் கொப்பரை கலன்!

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 07,2012,05:05 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு: பெருந்துறை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனையாளர் சங்கத்தில், ஆறு லட்சம் ரூபாய் செலவில் சூரிய உலர் கொப்பரை கலன் வைக்கப்பட்டுள்ளது.
தேங்காய்களை, கொப்பரையாக மாற்ற சூரிய ஒளி இன்றிமையாதது. தேங்காய்களை உடைத்து, சூரிய ஒளியில், ஒரு வாரம் வரை உலர்த்தும் போது, கொப்பரையாக மாறுகிறது. மழை, குளிர்காலத்தில் கொப்பரை உற்பத்தி வெகுவாக சரியும். அப்போது, உற்பத்தியாகும் தேங்காயை, கொப்பரையாக மாற்ற முடியாமல், விவசாயிகள் நஷ்டமடைவர்.
இப்பிரச்னையை போக்கும் வகையில், தமிழக அளவில், ஈரோடு உட்பட ஐந்து மாவட்டங்களில், தலா, ஐந்து லட்சம் ரூபாய் மதிப்பில், சூரிய உலர் கொப்பரை கலன் அமைக்கப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில், பெருந்துறை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், இக்கலன் வைக்கப்பட்டுள்ளது. இக்கலனில், ஒரு முறைக்கு, 8,000 முதல், பத்தாயிரம் காய்கள் வரை உலர்த்தலாம். மழைக்காலத்தில் இக்கலன் மிகவும் பயனுள்ளதா இருக்கும். இதற்கான கட்டணம் சங்கம் சார்பில் நிர்ணயிக்கப்படும்.

மாவட்டத்தில் உள்ள, 163 தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில், 80 சதவீதம் குடோன் வசதி உள்ளது. தற்போது, தலா, 100 மெ.டன் பொருட்கள் வைக்கும் அளவுக்கு, 56 சங்கங்களுக்கு முழு மானியத்துடன் குடோன் கட்ட அரசு நிதி ஒதுக்கீடு செய்ததில், 54 குடோன்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இம்மாவட்டத்தில் நலிவுற்று இருந்த, 34 தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களுக்கு, தலா, 20 லட்சம் ரூபாய் அளவில் வட்டியில்லா கடன் வழங்கப்பட்டது. நகைக்கடன் மற்றும் இதர கடன் வழங்கியும், டெபாசிட் போன்ற முயற்சி மூலம், தற்போது, இரண்டு கோடி ரூபாய் நிதி சுழற்சியுடன் இச்சங்கங்கள் செயல்படுகின்றன. இதில், இரண்டு சங்கங்கள் மட்டும் இன்னும் நலிவடைந்த நிலையில் உள்ளன. அச்சங்கத்தையும் லாபகரமாக இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## துவரை சாகுபடிக்குரூ.7,500 மானியம்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 07,2012,05:06 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு: துவரை சாகுபடியை ஊக்குவிக்க, அரசு மூலம் ஏக்கருக்கு, 7,500 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.துவரையில் கூடுதல் பரப்பை உருவாக்கவும், வறட்சியான நேரத்தில் வயலில் சாகுபடியை தொடரவும் திருந்திய துவரை சாகுபடி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இம்முறையில், விதைப்புக்குப்பதில், நாற்றுவிட்டு நடவு செய்வதால், குறைந்த அளவில் விதை பயன்படுத்தினால்போதும். இம்முறையில் விவசாயிகள் சாகுபடி செய்ய ஏக்கருக்கு, 7,500 ரூபாய் மானியத்தை, வேளாண் துறை மூலம் அரசு வழங்குகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் குறிப்பிட்ட ஏக்கர் இலக்கு நிர்ணயித்து, மானியம் வழங்கப்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில், 600 ஹெக்டேருக்கு இம்மானியம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இம்மானியம், உரம், விதை, கருவி உதவியாக வழங்கப்படும்.

ஒரு ஏக்கருக்கு சாதாரண முறையில், 900 முதல், 1,000 கிலோ மகசூல் கிடைக்கும். நாற்றுவிட்டு நடவு செய்யும் முறையில், ஒரு ஏக்கருக்கு, 2,000 முதல், 3,000 கிலோ வரை மகசூல் கிடைக்கும். 130 நாள் பயிரான துவரை, 20 நாள் நாற்றுவிட்டு நடவு செய்வதால், விரைவாக வளர்வதுடன், கூடுதல் மகசூல் கிடைக்கும். ஏக்கருக்கு, பத்து முதல், 12 ஆயிரம் ரூபாய் உற்பத்தி செலவாகிறது. 25 ஆயிரம் முதல், 30 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கும்.

தற்போது மழை பொய்த்து, ஆறு, வாய்காலில் தண்ணீர் இல்லாத நிலையில், விவசாயிகளுக்கு துவரை சாகுபடி கை கொடுக்கும்.

## பவானி ஆற்றில் தண்ணீர் நிறுத்தம்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 07,2012,05:05 IST

கருத்தை பதிவு செய்ய

சத்தியமங்கலம்: பவானி ஆற்றில் தண்ணீர் நிறுத்தப்பட்டதால் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.பவானிசாகர் அணையில் இருந்து நேற்று முன்தினம் காலை, 8 மணி முதல் பவானி ஆற்றில் தண்ணீர் திறந்துவிடுவது முற்றிலும் நிறுத்தப்பட்டது. பவானி ஆறு வறண்டு காணப்படுகிறது. பவானி ஆற்றின் மூலம் சத்தியமங்கலம் நகராட்சி, அரியப்பம்பாளைம் டவுன் பஞ்சாயத்து உள்பட, 50க்கும் மேற்பட்ட பஞ்சாயத்துகள், குடிநீர் தேவையை பூர்த்தி செய்கின்றன. பவானி ஆற்றில் தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டதால், சாக்கடை தண்ணீர் மட்டுமே தேங்கியுள்ளது. ஒருவித துர்நாற்றம் வீசுகிறது. இந்த தண்ணீரில் இருந்து குடிநீர் எடுக்கப்படுவதால், சுகாதாரமாக குடிநீர் கிடைக்க வாய்ப்பில்லை. "குடிநீரை காய்ச்சி குடிக்கவேண்டும்' என, நகராட்சி தலைவர் சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

## தேயிலை தூள் ஏலத்தில் 94 சதவீதம் விற்பனை

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 07,2012,00:14 IST

கருத்தை பதிவு செய்ய

குன்னூர் : குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்க ஏலத்தில் வரத்து குறைந்துள்ள நிலையிலும், 94 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்கம் சார்பில், நடந்த 31வது ஏலத்தில், இதில் 14 லட்சத்து 47 ஆயிரம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 10.24 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 4.23 லட்சம் கிலோவும் அடங்கும். இந்த வாரம் 94 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. சாதாரண இலை ரகத்துக்கு சராசரியாக ஒரு கிலோவுக்கு 62-64 ரூபாய் வரையிலும், உயர் ரகம் 100-130 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது. சாதாரண டஸ்ட் ரகத்துக்கு 70 முதல் 75 ரூபாய் வரையிலும், உயர் ரகத்துக்கு 100 முதல் 145 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது. அதிகபட்சமாக "ஹோம்டேல்' எஸ்டேட் சி.டி.சி., டஸ்ட் ரக தேயிலை தூள் ஒரு கிலோ 162 ரூபாய்க்கு விற்பனையானது. சாம்ராஜ் எஸ்டேட் ஆர்தடக்ஸ் ரக தேயிலை அதிகபட்சமாக ஒரு கிலோ 200 ரூபாய்க்கு விற்பனையானது. கடந்த வாரம் தேயிலை விலையில், 3 ரூபாய் விலை ஏற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த ஏலத்தில் ரஷ்யா மற்றும் பாகிஸ்தான் வர்த்தகர்கள் மற்றும் உள் நாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் கலந்து கொண்டனர். இந்நிலையில்,வரும் வியாழன்

மற்றும் வெள்ளி கிழமை நடக்கும் 32வது ஏலம் ஆகஸ்ட் மாதம் 9 மற்றும் 10ம் தேதிகளில் நடக்கிறது. இதில்,13 லட்சத்து 30 ஆயிரம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது.

---

தினகரன்

## தேயிலை தூள் தரம் சிறக்க வலியுறுத்தல்

பதிவு செய்த நேரம்:2012-08-06 10:24:15

குன்னூர், : நீலகிரி மாவட்டத்திலுள்ள தனியார் தேயிலை ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள் குன்னூரில் செயல்பட்டு வரும் வர்த்தகர்கள் கழக ஏல மையத்தில்(சிடிடிஏ) விற்பனை செய்யப்படுகிறது. இங்கு கடந்த 7 மாதங்களில் 30 ஏலங்கள் நடைபெற்று உள்ளது. இதன் மூலம் இந்தாண்டு ரூ.52.82 கோடி கூடுதல் வருவாய் கிடைத்துள்ளது. இந்தாண்டு முதல் 7 மாதங்களில் 3.15 கோடி கிலோ தேயிலை தூள் விற்பனை ஆனது.
கடந்தாண்டு இதே கால கட்டத்தில் 2.98 கோடி கிலோ விற்பனை செய்யப்பட்டது. இந்தாண்டு சராசரி விலையாக தேயிலை தூளுக்கு ரூ.77.42 கிடைத்தது. கடந்தாண்டு இதே கால கட்டத்தில் ரூ.64.11 ஆக சராசரி விலை இருந்தது. இந்தாண்டு கடந்த 7 மாதங்களில் மொத்த வருவாய் ரூ.243.87 கோடி. கடந்தாண்டு இதே கால கட்டத்தில் ரூ.191.05 கோடி வருவாய் கிடைத்தது. 26 சதவீதம் இந்தாண்டு வருவாய் அதிகரித்துள்ளது.
தேயிலை வரத்து குறைவாக இருந்தாலும் உள்நாடு, வெளி நாட்டு வர்த்தகர்கள் தரமான தேயிலை தூளை கூடுதல் விலைக்கு கொள்முதல் செய்வதால் வருவாய் அதிகரித்துள்ளது. இதை தொடர்ந்து தக்க வைக்கும் வகையில் தரத்திற்கு முக்கியத்துவம் அளித்து வர்த்தகர்கள் கருத்துக்கு ஏற்ப தேயிலை தூளை உற்பத்தி செய்து விற்பனைக்கு கொண்டு வர வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

## 50 சதவீத மானியத்தில் கோழிப்பண்ணை அமைக்கலாம் விவசாயிகளுக்கு அழைப்பு

பதிவு செய்த நேரம்:2012-08-06 10:30:26

அரியலூர், : 50 சதவீத மானியத்துடன் கறிக்கோழி, முட்டைக்கோழி, நாட்டுக்கோழி பண்ணை அமைக்க விவசாயிகள், மகளிர் குழுக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அரியலூர் கலெக்டர் அனுஜார்ஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:
கிராமங்களில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு முக்கிய தொழிலாக உள்ளது. கோழி வளர்ப்பை ஊக்கப்படுத்த அரசு சார்பில் கோழிகளை வளர்க்க கொட்டகை அமைப்பதற்கான செலவில் 25 சதவீதம், நபார்டு வங்கியின் கோழி துணிகர முதலீட்டு நிதியிலிருந்து 25 சதவீதம் என 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. மீதமுள்ள 50 சதவீத நிதியை பயனாளிகள் தங்கள் சொந்த செலவில் அல்லது வங்கி கடனாக பெற்று அமைக்கலாம். இது கறிக்கோழி, முட்டைக்கோழி, நாட்டுக்கோழி அமைக்க இருக்கும் பயனாளிகளுக்கு பொருந்தும்.
நாட்டு கோழி வளர்ப்பை ஊக்கப்படுத்த 2ம் தொகுப்பில் கோழிக்குஞ்சுகள் வாங்கும் செலவில் அரசு சார்பில் 50 சதவீத மானியமும், 3ம் தொகுப்பு கோழி குஞ்சுகள் வாங்கும் செலவில் 30 சதவீதம் மானியமும் வழங்கப்படும்.
கறிக்கோழி, முட்டைக்கோழியில் 1,000 முதல் 5,000 கோழிகள் கொண்ட பண்ணைகள், 250 முதல் 500 வரை எண்ணிக்கை கொண்ட நாட்டுக்கோழி பண்ணைகள் அமைக்கலாம். இத்திட்டத்தில் விவசாயிகள், தனிநபர் தொழில் முனைவோர், சுய உதவிக்குழுக்கள் தகுதியானவர்கள்.
கோழிப்பண்ணை அமைக்க போதுமான நிலம் தங்கள் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர் பெயரிலோ இருக்க வேண்டும். கோழி வளர்ப்பில் முன்அனுபவம் உள்ளவர்கள், ஏற்கனவே கொட்டகை அமைத்த பயனாளி புதிய கொட்டகை அமைக்கவும், கோழிப்பண்ணையை விரிவாக்கம் செய்ய ஆர்வமுள்ள விவசாயிகளும் பயன்பெறலாம்.
தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தமிழ்நாடு மருத்துவம், அறிவியல் பல்கலை கழகத்தின்கீழ் இயங்கும் பயிற்சி மையங்களில் 5 நாட்களுக்கு முறையான பயிற்சி அளிக்கப்படும்.
மேற்கூறிய தகுதியும், ஆர்வமும் உள்ளவர்கள் கலெக்டரால் அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைப்பாளரின் கடிதம் அல்லது சொந்த நிதிக்கான சான்றுடன் விண்ணப்பங்களை கலெக்டரிடம் சமர்ப்பிக்கலாம்.

## கத்தரி, வெண்டை கிலோ 20 ரூபாய்

பதிவு செய்த நேரம்:2012-08-06 11:27:11

மதுரை, : சென்ட்ரல் மார்க்கெட்டில் கத்தரிக்காய், வெண்டைக்காய் வரத்து குறைவால் கிலோ ரூ.20க்கு விற்பனை செய்யப்படுகிறது.
மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் நேற்றைய விலை நிலவரம் (கிலோ, ரூபாயில்):
நாட்டுத்தக்காளி 8, கத்தரிக்காய் 20, வெண்டைக்காய் 20, பல்லாரி 13, சின்னவெங்காயம் 30, உருளை 30, கருணை 30, சேனை 25, சேப்பங்கிழங்கு 30, காரட் 30, பீட்ரூட் 12, பட்டர்பீன்ஸ் 50, சோயாபீன்ஸ் 40, பச்சை பட்டாணி 100, முருங்கை பீன்ஸ் 40, நூக்கல் 15, முள்ளங்கி 15, அவரை

20, மிளகாய் 20, சுரைக்காய் 10, சவ்சவ் 25, சீனி அவரைக்காய் 10, வெள்ளைபூசணி 15, சர்க்கரை பூசணி 12, கருவேப்பிலை 20, கொத்தமல்லி 30, புதினா 10, காலிபிளவர் 15, பீர்க்கங்காய் 20, முட்டைக்கோஸ் 12, புடலங்காய் 15, சின்னபாகற்காய் 40, பெரிய பாகற்காய் 20, இஞ்சி 40, கீரை வகைகள் 15.

மொத்த வியாபாரி சேதுபதி கூறுகையில், ‘‘கத்தரிக்காய், வெண்டைக்காய் வரத்து சற்று குறைந்துள்ளது. அதனால் கடந்த வரை வாரம் வரை கிலோ ரூ.15க்கு விற்கப்பட்டது. தற்போது கிலோ ரூ.20 ஆக உயர்ந்துள்ளது. மற்ற காய்கறிகளின் விலையில் பெரியவில் மாற்றம் இல்லை. சீராக உள்ளது,’’ என்றார்.